
மனமாற்றமும் மன்னிப்பும்
பாடம் 10 ஜூன் 6, 2026

"நம்முடைய
பாவங்களை நாம்
அறிக்கையிட்டால்,
பாவங்களை நமக்கு
மன்னித்து எல்லா
அநியாயத்தையும் நீக்கி
நம்மைச்
சுத்திகரிப்பதற்கு அவர்
உண்மையும் நீதியும்
உள்ளவராயிருக்கிறார்."

(1 யோவான் 1:9)



“எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,” (ரோ. 3:23) என்று வேதாகமம் அறிவிக்கிறது.


நமது பாவத்தை நம்மால் தவிர்க்கவோ அல்லது நீக்கவோ முடியாது என்றும் அது அறிவிக்கிறது(எரே. 13:23; 2:22).

ஆனால் நம்முடைய பாவத்தை மன்னிக்க தேவன் சித்தமாயிருக்கிறார், தேவன் மன்னிக்க விரும்பாத அளவிற்கு, எந்த பாவமும் அவ்வளவு பெரிதோ அல்லது அவ்வளவு பயங்கரமானதோ அல்ல(ஏசாயா 1:18).

ஒரேயொரு நிபந்தனை மாத்திரமே: மனமாற்றம்.







**மனமாற்றம்:**

- தாமதமான மனமாற்றம்
- உண்மையான மனமாற்றம்
- மனமாற்றத்திற்க்கான அழைப்பு

**மன்னிப்பு:**

- மன்னிப்பின் கிருபை
- மன்னிப்பின் வஸ்திரங்கள்



# மனமாற்றம்



# தாமதமான மனமாற்றம்

"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்." (லூக்கா 10:41)

லாசருவின் வீட்டில், இயேசு இரட்சிப்பிற்கு இன்றியமையாத முக்கிய காரியங்களைப் பற்றி பேசினார். ஆனால் மார்த்தாள் செவிகொடுக்கவில்லை. அவளுக்கு அதற்கு நேரமில்லை. அவளுக்கு செய்யவேண்டிய காரியங்கள் எத்தனையோ இருந்தன! (லூக். 10:40-41).





இது நமக்கும் நிகழ்கிறது. நாம் பாவம் செய்து, பரிசுத்த ஆவியானவர் நம்மை மனந்திரும்ப அழைக்கும்போது, நம்முடைய பாவ நிலையை சிந்தித்துப் பார்த்து மன்னிப்பு தேடுவதிலிருந்து நம்மை தடுக்கும் வகையில், சாத்தான் நம்மை பல்வேறு செயல்பாடுகள், கவலைகள் அல்லது வேறு ஏதேனும் கவனச்சிதறல்களால் நிரப்பிவிடுகிறான்.






ஆனால் தேவன் நம்மை விடுகிறதாக இல்லை. அவர் தன் அழைப்பில் உறுதியாக இருக்கிறார் (எசே. 33:11). அவர் நம்முடைய பாவங்களை அழுக்கு ஆடைகளுக்கு ஒப்பிடுகிறார் (ஏசா. 64:6). அவர் ஒரு பரிமாற்றத்தை முன்மொழிகிறார்: நமது அழுக்கு ஆடைகளுக்கு பதில், அவருடைய தூய ஆடைகள் (சகரி. 3:4), இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட ஆடைகள் (வெளி. 7:14).



# உண்மையான மனமாற்றம்

"கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள்; நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார்; நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார்." (ஓசியா 6:1)

மனமாற்றம் என்றால் என்ன? உண்மையான மனமாற்றத்திற்கும் போலியான மனமாற்றத்திற்கும் இடையிலான வேறுபாடு என்ன? (2 கொரி. 7:10)



ஒரு பாவம் விரும்பதகாத விளைவுகளை ஏற்படுத்தும்போதே, வருத்தம் தோன்றுகிறது. நாம் செய்த செயல் நல்லவிதமாக அமையாததே இந்த வருத்தத்திற்கு காரணமாகிறது. அவ்விளைவுகள் எதிர்மறையாக அமைந்திருக்காவிட்டால், நமது செயல்களை குறித்து நாம் துயரம் ஏதும் கொண்டிருக்கமாட்டோம். இது உண்மையான மனமாற்றம் ஆகாது.

நாம் பாவம் செய்தோம் என்பதே நமக்கு துயரத்தையும் - அதன் விளைவாக தீய பின்விளைவுகள் ஏற்பட்டிருந்தாலும் இல்லலாவிட்டாலும் - மன்னிப்பை பெற வேண்டும் எனும் ஆழ்ந்த விருப்பத்தையும் ஏற்படுத்தும் போது, நாம் உண்மையான மனமாற்றத்தையும் எதிர்கொள்கிறோம்.



நாம் பாவம் செய்யும் போது, பரிசுத்த ஆவியானவர் நம்மை "துண்டு துண்டாக கிழித்து", ஆழ்ந்த துயர உணர்வால் நம்மை "காயப்படுத்துகிறார்". நாம் உண்மையான மனந்திரும்புதலோடு அதற்கு பதிலளித்தால், தேவன் நம் பாவங்களை மன்னித்து, நம்மை குணமாக்குகிறார் (ஓசியா. 6:1).

# மனமாற்றத்திற்கான அழைப்பு

“ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்,” (அப் 3:19)



யோவான் ஸ்நானகனும் இயேசுவும் தங்களுடைய ஊழியத்தை ஒரே செய்தியை கொண்டு துவங்கினர்: “மனந்திரும்புங்கள்” (மத். 3:1-2; 4:17). ஏன் மனமாற்றம் முக்கியமானது? ஏனென்றால் மனமாற்றமில்லாமல் நமது பாவங்களுக்கு மன்னிப்பு இல்லை (அப் 2:38; 3:19). இந்த செயல்முறை எவ்வாறு நடைபெறுகிறது?



அவருடைய நற்குணத்தினிமித்தம், தேவன் நம்மை மனந்திரும்புதலுக்கு அழைக்கிறார் (ரோ. 2:4)

நாம் அவர் அழைப்புக்கு பதிலளிக்கிறோம்

இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தின் நிமித்தம், தேவன் நம் பாவங்களை மன்னிக்கிறார் (கொலோ. 1:13-14)

இழைக்கப்பட்ட தவறுகளுக்காக ஆழ்ந்த வருத்தத்துடன்

பாவத்தை கைவிடுவதற்கான நேர்மையான முடிவுடன்



மனமாற்றமும் மன்னிப்பும் எப்போதும் நம்மை சீர்திருத்தத்தை நோக்கி இட்டு செல்லும் என்பதை நினைவில் கொள்க; அதாவது, நாம் பாவம் செய்வதை நிறுத்தும் மனப்பான்மையின் மாற்றத்திற்கு வழிநடத்த வேண்டும் (யோ. 5:14).





# மன்னிப்பு



# மன்னிப்பின் கிருபை

"கர்த்தாவே, என் அக்கிரமம் பெரிது; உம்முடைய நாமத்தினிமித்தம் அதை மன்னித்தருளும்." (சங்கீதம் 25:11)



தேவன் நம்மை மன்னிக்க வேண்டும் என்று வற்புறுத்தும் எதுவும் இல்லை. அந்த மன்னிப்பை பெறுவதற்கு நாம் தகுதியாவதற்காக செய்யக்கூடிய எதுவும் இல்லை. தேவன் நமக்கு மன்னிப்பை தமது கிருபையினாலும் தமது எல்லையற்ற அன்பினாலும் அருளுகிறார். அவர் நம்மை மன்னிக்கிறார், ஏனென்றால், "நல்லவரும், மன்னிக்கிறவரும், தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவர்மேலும் கிருபை மிகுந்தவருமாயிருக்கிறார்" (சங் 86:5; பார்க்க, யாத் 34:6-7).

அவருடைய அன்பு, சிலுவையில் தம்மையே ஒப்புக்கொடுக்கவும், நம்மால் செலுத்த இயலாத பாவக் கடனை செலுத்தவும் அவரை வழிநடத்தியது (எபே. 2:4-5).






நாம் நம்முடைய பாவங்களை சிலுவையின் பாதத்தடியில் கொண்டு வரும் போது, நம்மை சுமையாக்கும் பாரத்திலிருந்து இயேசு நம்மை விடுவிக்கிறார் (எபி. 12:1-2)



# மன்னிப்பின் கிருபை

"கர்த்தாவே, என் அக்கிரமம் பெரிது; உம்முடைய நாமத்தினிமித்தம் அதை மன்னித்தருளும்." (சங்கீதம் 25:11)



பாவத்திற்கும் கிருபைக்கும் இடையிலான உறவு என்ன?

**பாவத்திற்கும் கிருபைக்கும் இடையிலான உறவு**

| ரோமர் 5:8 | ரோமர் 5:20 | ரோமர் 5:21 | ரோமர் 6:23 |
|---|---|---|---|
| "நாம் பாவிகளாயிருக்கையில்" | "பாவம் பெருகினது" | "பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது" | "பாவத்தின் சம்பளம் மரணம்" |
| "கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே" | "கிருபை அதிகமாய்ப் பெருகிற்று" | "கிருபையானது… நித்தியஜீவனுக்கு ஏதுவாக ஆண்டுகொண்டது" | "தேவனுடைய கிருபைவரமோ …நித்தியஜீவன்" |



# மன்னிப்பின் வஸ்திரங்கள்

"சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான்." (மத்தேயு 22:12)



தேவனுடைய சபையும்—அதன் ஒவ்வொரு அங்கத்தினரும் —உடை அணிந்திருக்கிறார்கள், "சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம்" மற்றும் "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல்" (வெளி. 19:8; எபே. 5:27).

அந்த மெல்லிய வஸ்திரம் "பரிசுத்தவான்களுடைய நீதிகளே" (வெளி. 19:8பி). ஆனால் இந்த நீதி அவர்களுடைய சொந்தமானது அல்ல: இது கிறிஸ்துவால் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது (வெளி. 7:14).





ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த போது, தங்கள் நிர்வாணத்தை தங்கள் சொந்த செயல்களால் மூடிக்கொண்டனர். ஆயினும், தேவனுக்கு முன்பாக தங்களை நிர்வாணமானவர்களாகவே கருதினர் (ஆதி. 3:7-10). தேவன் கொடுத்த அந்த வஸ்திரமானது, கிறிஸ்து நமக்கு அருளும் "கலியாண வஸ்திரத்துக்கு" அதாவது, நமது பாவங்களை முற்றிலுமாய் அழித்துவிடும் அவருடைய பரிபூரண நீதிக்கு – ஒரு அடையாளமாய் திகழ்ந்தது (ஆதி. 3:21; சங். 51:7-10).



அந்த வஸ்திரம் இல்லாமல் யாரும் பரலோகம் செல்ல முடியாது (மத். 22:1-14).

“கடவுளின் பிள்ளையாக விரும்புகிற எவரும், மனந்திரும்புதலும் மன்னிப்பும் கிறிஸ்துவின் பாவநிவாரணப் பலியின் மூலமாகவே அன்றி வேறெதன் மூலமாகவும் பெறப்பட இயலாது என்னும் உண்மையை ஏற்றுக்கொண்டாக வேண்டும். இவ்விஷயத்தில் உறுதியடைந்த அந்தப் பாவி, தனக்காகச் செய்யப்பட்ட மீட்பின் பணிக்கு இசைவாகத் தானும் முயற்சி எடுக்க வேண்டும்; மேலும், கடவுளின் புதுப்பிக்கும் வல்லமை தன் ஆத்துமாவிற்குள் வருவதற்காக, சோர்வற்ற மன்றாட்டோடு கிருபையின் சிம்மாசனத்தை நோக்கி விண்ணப்பிக்க வேண்டும். மனந்திரும்புகிறவர்களைத் தவிர வேறு எவரையும் கிறிஸ்து மன்னிப்பதில்லை; ஆனால், அவர் யாரை மன்னிக்கிறாரோ, அவர்களை முதலில் மனந்திரும்புகிறவர்களாக மாற்றுகிறார். மீட்பிற்காகச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடு முழுமையானது; மேலும், கிறிஸ்துவின் நித்திய நீதியானது விசுவாசிக்கிற ஒவ்வொரு ஆத்துமாவின் கணக்கிலும் வரவு வைக்கப்படுகிறது. பரலோகத்தின் தறியில் நெய்யப்பட்ட, விலையுயர்ந்ததும் கறையற்றதுமான அந்த ஆடை, மனந்திரும்பி விசுவாசிக்கிற பாவிக்காகவே வழங்கப்பட்டுள்ளது.”

எலன் ஜி உவைட் (செலக்டட் மெசஜஸ், அதி. 1, பக். 393)